25th April 1960]

(4) THE INDIAN PENAL CODE AND THE CODE OF CRIMINAL PROCEDURE (MADRAS AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 7 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, in the place of the motion set down in the agenda, I would like to move the following motion :—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 7 of 1960) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. T. Daniel.
Sri T. Sampath.
Sri V. S. Manickasundaram.
Sri P. Ramachandran.
Srimathi T. N. Anandanayaki.
Sri A. P. C. Veerabahu.
Sri V. Vedayyan.
Sri M. P. Subramaniam.
Sri P. S. Chinnadurai.
Sri Sowdi S. Sundara Bharathi.
Sri D. S. Authimoolam.
Sri M. Kalyanasundaram.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது இப்பொழுது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகிற பல ஆட்சேபகரமான விஷயங்களைப் பிரசுரிக்காமல் தடை செய்வதற்காக. இதற்கு முன்பு "ப்ரஸ் அப்ஜெக்ஷனபிள் மேட்டர் ஆக்ட், 1951" என்று ஒரு மத்திய அரசாங்கச் சட்டம் அமுலில் இருந்து வந்தது. அதன் கீழ் இவ்வாறு ஆட்சேபகரமான விஷயங்கள் பிரசுரிக்கக்கூடிய பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வழி இருந்தது. 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ம் தேதியிலிருந்து அந்தச் சட்டம் அமுலில் இல்லை. அந்தச் சட்டம் ரத்தாகிவிட்டது. ஆகையினால் இன்றைக்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் இந்தியன் பினல் கோட்டின் கீழ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதில் முக்கியமான நடவடிக்கை, யார் எழுதப்பட்டாலும் அதனால் பாதிக்கப்படுகிறவர்களில் பலர் பத்திரிகைகளில் வந்தது போதும் இனிமேல் கோர்ட்டில் ஒரு தடவை அவமானப் படுத்துவதற்கு இல்லை என்பதற்காக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விடுகின்றனர். இதனால் அந்தப் பத்திரிகைகளைப் பிரசுரிக்கக் கூடியவர்களுக்கு இன்னும் கொஞ்சம் தூண்டுதலாக ஆகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம்.

அதை விட்டு இன்னும் இரண்டு விதமான பிரசுரங்கள் இருக்கின்றன. அதே மாதிரி பெண்கள் விஷயமாகவும் மற்ற விஷயமாகவும் எழுதுவதின் மூலமாக அதிக பத்திரிகைகள் அதிகமாக விற்கவேண்டும் என்று ஒரு

[Sri C. Subramaniam] [25th April 1960

பக்கம், இன்னொரு பக்கம் மற்றவர்களைப்பற்றி அவதூறாக எழுதுவதும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுத முயற்சிப்பதும். இன்றைய தினம் இந்த இரண்டையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. முதன் முதலில் இந்தியன் பினல் கோட் 292-ஆவது செக்ஷன் இருக்கிறது. அதில் கொடுத்திருக்கக்கூடிய தண்டனையை அதிகப்படுத்தி இருக்கிறது. அதில் மூன்று மாதங்கள் சிறைவாசம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பதிலாக இரண்டு வருஷ தண்டனை இதன் கீழ் கொடுக்கலாம் என்று தண்டனையை அதிகப்படுத்தியிருக்கிறது. இது ஒன்று.

இன்னும் புதிய செக்ஷன் ஒன்றும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது செக்ஷன் 292(ஏ). இது ரொம்பவும் முக்கியமானது. அதாவது பத்திரிகைகள் என்று பேசும்போது அவைகளில் எழுதக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தடுக்கவும், அதற்கு மேல் போஸ்டர்கள் போடுகிறார்கள். அது இன்னும் மோசமானது. ஆகவே போஸ்டர்கள் போடுகிறவர்கள், எழுதுகிறவர்கள் இவர்கள் எல்லோரையும் சேர்த்து இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தால்தான் இந்த ஆபத்தைத் தடுக்க முடியும் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல இடங்களில் பல குடும்பங்களைப்பற்றியும் பல குடும்ப ஸ்திரீகளைப்பற்றியும் சிறிய பெண்களைப்பற்றியும் தாறுமாறாக எழுதக்கூடிய நிலைமையில் பத்திரிகைகளில் பார்க்கிறோம். அவைகளை எப்படித் தடுப்பது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. பல சமயங்களில் அதைப் பயன்படுத்திக்கொண்டு அந்தப் பத்திரிகைகளில் முதலில் பிரசுரித்துவிட்டு மற்ற விவரங்கள் அடுத்த இதழில் வருகிறது என்று எழுதிவிடுகிறார்கள். அப்படி அடுத்த இதழில் வராமல் இருப்பதற்காக பணத்தைக் கொடுத்தாவது தடுத்து விடலாம், சரி செய்து விடலாம் என்று இருக்கிறார்கள். இந்த முறையில் பல பத்திரிகைகள் பணம் சம்பாதித்து வருகின்றன. இப்படிப்பட்ட போஸ்டர்கள் சாதாரணமாக வெற்றிலை பாக்குக் கடைகளில்தான் அதிகமாகத் தொங்கவிடப்படுகிறது. இதன் மூலம் விளம்பரப்படுத்தப்படுகிறது. அதையெல்லாம் தடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்குக் கண்டிப்பான சட்டம் இருக்க வேண்டியது அவசியம் என்கிற முறையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு புதிய செக்ஷனை அதாவது 292(ஏ) என்று அதற்கு வழி செய்யக்கூடிய அளவில் எல்லா விஷயங்களையும் கட்டுப்படுத்தக்கூடிய முறையில் இந்த செக்ஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்தபடியாக இருப்பது 293-வது செக்ஷனைப்பற்றியது. செக்ஷன் 292(ஏ)-யில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் தண்டனையை அதிகப்படுத்தி இருக்கிறோம். ஆறு மாதங்கள் என்று இருப்பதற்குப் பதிலாக மூன்று வருஷங்கள் என்று போடப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்து கிரிமினல் ப்ரொஸீஜர் கோடைத் திருத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். எல்லா பொது மக்களும் இது நியாயமானது என்று கருதி இதை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இந்தச் சட்டம் நல்ல முறையில் அமைய வேண்டும் என்பதற்காக செலெக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறோம். அங்கே இதைப்பற்றி நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதைப் போலவே இன்னொரு மசோதாவையும் நாளைக்கு கொண்டு வரப்போகிறோம். அதையும் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பப்போகிறோம். அதாவது கோர்ட் நடவடிக்கை, கோர்ட்டில் நடக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றியும் ஆபாசமாக பிரசுரிக்கிறார்கள். அதையும் தடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு மசோதா வருகிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு சீக்கிரத்தில் செலெக்ட் கமிட்டி அவைகளைப் பரிசீலனை செய்து இன்னும் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு செலெக்ட் கமிட்டி நன்றாக பரிசீலனை

25th April 1960] [Sri C. Subramaniam]

செய்து. வேண்டிய திருத்தங்களைச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நல்ல முறையில் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் செலெக்ட் கமிட்டி திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த அளவில் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சபையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 7 of 1960) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. T. Daniel.
Sri T. Sampath.
Sri V. S. Manickasundaram.
Sri P. Ramachandran.
Srimathi T. N. Anandanayaki.
Sri A. P. C. Veerabahu.
Sri V. Vedayyan.
Sri M. P. Subramaniam.
Sri P. S. Chinnadurai.
Sri Sowdi S. Sundara Bharathi.
Sri D. S. Authimoolam.
Sri M. Kalyanasundaram.

I have allowed half an hour for this Bill.

SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, இது போன்ற ஒரு மசோதா பல காலத்திற்கு முன்பாகவே இந்த சபையில் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வந்தது. அந்த ஒரு கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் ஏற்கனவே இருக்கக்கூடிய ஐ.பி.சி. 292-வது செக்ஷனில் இருக்கிறது அப்சீன் லிடரேசர் இருந்தாலும்கூட அதற்குத் தண்டனை கொடுக்க ப்ரொவிஷன் இருக்கிறது. அதைத் தவிர இப்பொழுது 292(ஏ) என்பதில் இரண்டு மூன்று விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது

'Literature which is grossly indecent, or is scurrilous or intended for blackmail . . .'

என்று மூன்று நான்கு அட்ஜெக்டிவ்ஸ் இருக்கின்றன. அதே போன்று லிடரேசர் இது சம்பந்தமாக டாகுமெண்ட் பிக்சர் இது எல்லாம் அதே மாதிரி இல்லாமல் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மாதிரியான சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(Sri M. Jagannathan in the Chair.)

இப்படி பத்திரிகைகளில் ஆபாசமாக விளம்பரப்படுத்துவதை தடை செய்வதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட நபர்களை குறிப்பிடாமல், பொதுவாக கீழ்த்தர உணர்ச்சியை கிளப்பக்கூடிய விஷயத்தை தூண்டி விட்டால், அது இதிலே வருமா என்பது ஓரளவிற்கு சந்தேகமாக இருக்கிறது. Section 292-ல் **obscene** என்று போடப்பட்டு இருக்கிறது. **grossly indecent, or is scurrilous or intended for blackmail** என்றுதான் இருக்கிறதே தவிர, இது போன்ற கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டும்படியான விஷயங்களையோ, சமாசாரங்களையோ, தடுப்பதற்கு முடியுமா ? ஒரு பத்திரிகையிலே வரும்படியான ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பல நடிகைகளுடைய படங்கள் போடப்படுகின்றன, பலவித கோணங்களில் இவைகளுக்கு இளைஞர்களிடையே கீழ்த்தர உணர்ச்சியை தூண்டும்படியான தலைப்புகள் கொடுக்கப்படுகின்றன. இதை "**obscene**" என்று சொல்வதில் அபிப்ராய பேதம் ஏற்படலாம். அந்த வார்த்தை பொருத்தம் இல்லாமலும் இருக்கலாம். **Which is calculated to injure public morals** எனவே அப்படிப் படம் போட்டு எழுதுவதையும் தடுப்பதற்கு வகை செய்ய வேண்டும்.

மற்றொரு பிரிவை எடுத்துக்கொள்ளும்போது **Madras Judicial Proceedings. Regulation of Reports) Bill** அதையும் சேர்த்தால் நன்றாக இருக்கும்.

இன்னும் திட்டவட்டமாக சொல்ல வேண்டுமானால் **'excite low, vulgar or immoral or sensual taste'** இந்தமாதிரி இருந்தால் நன்றாக இருக்கும். எனவே அதையும் இதிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். **Explanation**-லே **For the purposes of this section, the word, 'scurrilous' shall be deemed to include any matter which is likely to be injurious to mora ity is calculated to inj re any person.** என்று பொதுவாகப் போடப்பட்டிருக்கிறதே தவிர குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. ஆகவே அதுவும் வரும்படியாக **broad based**-ஆக இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறி, பொறுக்குக் கமிட்டியிலே இதுவெல்லாம் கவனிக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri S. M. ANNAMALAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, பத்திரிகைக்குமட்டும் என்று சொன்னார்கள். ஆனால் இதைப் படித்து பார்க்கின்றபோது, மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஒரு **(atom bomb)** போல் இருக்குமோ என்று சந்தேகப்படும் அளவிற்கு இருக்கிறது. ஏறத்தாழ 5 (**clause**)-கள்தான் இருக்கின்றது என்றாலும்கூட. இது பத்திரிகைகளை மட்டுமல்ல. மேடைப் பேச்சுகளையும் பாதிக்கும். இப்பொழுது மாற்றுக் கட்சிக்காரர்களுக்குத்தான் சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர்களுக்கு, எந்த சுருக்கெழுத்தாளரையும் அனுப்புவதில்லை. அவர்கள் ஏதாவது ஆபாசமாகப் பேசுகிறார்களா, அல்லது கண்ணியமற்ற முறையிலே பேசுகின்றார்களா என்பதை சர்க்கார் கவனிப்பதே கிடையாது. ஆனால் இந்த செக்ஷன்படி, பூராவையும் படித்துப் பார்த்தால், ஆபாசம், ஸ்கரிலஸ் என்பதற்கு (**defin tion**-ஏ) கிடையாது. கடைசியிலே (**Explanation**) என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் கூட சரியாக சொல்லப்படவில்லை. அது போலவே (**indecent**) என்ற வார்த்தைக்கும் சரியாக **definition**-ஏ கிடையாது. வேண்டுமென்றே மாற்றுக் கட்சிக்காரர்களை ஒழிக்க வேண்டும் என்ற திட்டத்தில் இந்த மசோதா கொண்டுவரப்படுகின்றதே ஒழிய வேறு அல்ல என்றுகூட

நினைக்கிறேன். அரசியல் நிர்ணயச் சட்டம் 19-வது பிரிவுபடி பேச்சு சுதந்தரத்தைக்கூட பறிக்கக்கூடிய அளவிற்கு இந்த மசோதா அமைந்திருக்கிறது.

நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்கிறேன். ஆனால் ஒரு சட்டம் இரண்டு கட்சிக்காரர்களுக்கும் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு மாற்றுக் கட்சிக்காரர்களை மட்டும் அடக்க வேண்டும் என்று நினைவிலே இது வருமேயானால், உண்மையிலேயே இதைவிட கேவலமான நிலைமை வேறு எந்த மாநிலத்திலேயும், எந்த நாட்டிலேயும், இருக்க முடியாது. இதில் ஒவ்வொரு கிளாசாக படிக்கும் போது உண்மையிலே அமைச்சர் அவர்கள் இதை வேண்டுமென்றே கொண்டுவந்திருக்கின்றார் என்றுகூட நினைக்கிறேன்.

அடுத்தபடியாக எல்லா மசோதாக்களிலும், விதிகளை நிர்ணயிக்கும் பொழுது அந்த விதிகள் சட்ட மன்றத்தின் மேசையின் மீது வைக்கப்படும். ஆனால் இதிலே அதுமாதிரி செய்ய முடியாது.

அதுமட்டுமல்ல. மற்ற **Clause**-களை படித்துப் பார்க்கும்போது **'Whoever offers or attempts to do any act which is an offence under this section'** என்று இருக்கிறது. அதாவது சாதாரணமாக வேஷம் போட்டுக்கொண்டு ஆபாசமாக நடிக்கப் போகிறான் என்று சந்தேகித்தால்கூட அவர்களை கைது செய்து விடலாம் என்ற பிரிவு இதிலே இருக்கிறது **'by signs or by visible representation'** என்று இந்த மசோதாவில் சொல்லி இருப்பது ஒரே பயங்கரமாக இருக்கிறது. கிராமப்புரங்களிலே துரௌபதி அம்மனை துயில் உரிவார்கள். அதுகூட ஆபாசமாக இருக்கும் சிலருக்கு. இதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் ஒரு சட்ட நிபுணன் அல்ல. இருந்தாலும், அவ்வளவு பயங்கரமான விதிகள் இருக்கிறது என்றால், இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதைப் போலவே **'conveys any picture or any printed or written document which is grossly indecent or, is scurrilous or intended for blackmail'** என்று சொல்லப்பட்டிருக்கிறது. நானே சாதாரணமாக ஆபாசப் படம் போடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட படத்தை பிரின்ட் செய்து பண்டல் கட்டி என்னுடைய நண்பர் இடத்திலே கொடுத்தால், அவரும் நண்பர் என்ற முறையிலே எடுத்துச் செல்வாரேயானால் அவரை கைது செய்துவிடலாம், என்று இந்தக் குறிப்பு சொல்கின்றது. **Indian Penal Code**-ல் 292 செக்ஷன்படி பார்த்தால் ஏதோ ஒரு அளவிற்கு பேச்சு சுதந்திரம் தரப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு **Amendment**-ஐக் கொண்டுவந்து, அதன் மூலமாக மறைமுகமாக மாற்றுக் கட்சிக்காரர்களை நசுக்க வேண்டும் என்ற எண்ணம் சர்க்காருடைய மனதிலே இருக்கிறது என்பது தெரிகிறது. சுருக்கெழுத்தாளர்களை மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு மட்டும் அனுப்பக்கூடாது. அவர்கள் கட்சிக்காரர்கள் பேசும் போதும் அனுப்ப வேண்டும். எந்தக் கட்சிக்காரர்கள் பேசினாலும் **Tape record** செய்து, அவர்கள் இன்னின்ன வகையில் ஆபாசமாக பேசுகிறார்கள், இன்னின்ன வகையில் பண்பற்ற முறையிலே பேசுகிறார்கள், ஆகையினாலே வழக்குத் தொடரப் போகிறோம் என்றுகூட சொல்லலாம். இதை அனைத்தையும் பொறுக்கு குழுவில் நல்ல முறையிலே பரிசீலனை செய்து, எதிர்க் கட்சியும் ஜனநாயக ரீதியில் இயங்க வேண்டும், ஜன நாயகம் தழைத்தோங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இதற்கு ½ மணி நேரம் போதும் என்று நினைக்கிறேன். ஒவ்வொருவரும் இரண்டு நிமிஷங்கள் பேசினால் நன்றாக இருக்கும். இன்னும் இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. பேச வேண்டு

மென்றால் பேசிக்கொண்டே போகலாம். இன்னும் இரண்டு அங்கத்தினர்கள் பேசி இதை முடித்து விடலாம் என்று இருக்கிறேன்.

Sri T. T. DANIEL : Mr. Speaker, Sir, I support this motion. I would say that this Bill is a very noble piece of legislation, which has been introduced at the most appropriate time when yellow journalism is slowly increasing in our State. The object of the Bill is really very noble. Nobody need feel that this Bill will be used against any particular political party. But one thing I desire to bring to the notice of the Hon. Minister, that is, whether the offences should be made cognizable or non-cognizable, bailable or non-bailable, or compoundable or non-compoundable. These are points which should engage the serious attention of the Joint Select Committee.

* Sri D. S. AUTHIMOOLAM : Mr. Speaker, பொதுவாக இப்போது தமிழ் நாட்டில் பத்திரிகை தொழில் வெகு வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. ஆனால் வளர்ந்துகொண்டு இருக்கின்ற முறையை பார்த்தால் மிகவும் வேதனைப்பட வேண்டி இருக்கிறது. தமிழ் நாடுதான் இந்தியாவிலேயே நாகரீகத்தில் சிறந்த பிரதேசம். இங்குதான் இப்போது ஆபாச பத்திரிகைகள் ஏராளமாகிவிட்டன. கனம் மந்திரி அவர்கள் பேசும்போது இந்த பக்கம் திரும்பி **Smile** பண்ணார். இந்த மாதிரி பெரிய மனிதர்கள் எல்லாம் **Yellow** பத்திரிகைகள் நடத்தி பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். எனக்கு முன்பு பேசிய எஸ். எம். அண்ணாமலை அவர்கள் **D. M. K.** பார்டியை நசுக்க இந்த மசோதா வந்திருக்கிறது என்று கவலைப்பட்டார்கள். அப்படி ஒன்றும் அவர்கள் விசேஷமாக கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மந்திரி அவர்கள் அவர் தெரிவித்த அச்சத்திற்கு லகுவாக பதில் சொல்லி விடுவார். கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக எல்லா பத்திரிகைகளின் தரமும் கெட்டுவிட்டது. இப்படிப்பட்ட பத்திரிகைகளை அரசியல் கட்சிகளும் ஆரம்பித்துவிட்டன. ஆகவே தமிழ் நாட்டின் பண்பாட்டை காப்பாற்ற இப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை இயற்ற வேண்டியது அவசியம் ஆகிறது. தனிப்பட்ட மனிதர்களுக்கு **I.P.C.** செக்ஷன் 500 இருக்கிறது. செக்ஷன் 193-ல் பாதுகாப்பு இருக்கிறது. இப்போது திருநெல்வேலியில் மூன்று பத்திரிகைகளை ஆரம்பித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பல பெண் பிள்ளைகளின் படத்தைபோட்டு நாளைக்கு இவர்களைப்பற்றி மற்ற தகவல்கள் வரும் என்று **Announcement** வருகிறது. இப்படிப்பட்ட பத்திரிகைகள் நிறைய சிலவாகிறது. இந்த மாதிரி பத்திரிகை தொழில் ரொம்ப லாபகரமாகிவிட்டது. பேப்பர் **Black market**-ல் நிறைய கிடைக்கிறது. வாங்கி போட்டு இப்படிப்பட்ட பத்திரிகைகளை அச்சடித்து பொது மக்கள், வாலிபர்கள் இவர்களின் கவனத்தை **Attract** பண்ணி அவர்களை கெடுக்கிறார்கள். ஆகவே இந்த சட்டம் வந்ததை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். இந்த சட்டத்தை கொண்டுவந்த மந்திரி அவர்களை வாழ்த்துகிறேன். நல்ல முறையில் இதை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த சட்டத்தை வரவேற்கிறேன். சமுதாயத்தில் இது போன்ற **Yellow** பத்திரிகைகள் இருக்கக் கூடாது என்பதில் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. ஆனால் நண்பர் அண்ணாமலையின் சந்தேகத்திற்கு இந்த **Section 3-B, Clause** காரணமாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன். 'Whoever by words, either spoken or intended to be read, or by signs or by visibe representations. makes any imputation which is grossly indecent or is scurrilous or intended for blackmail . . . என்று இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டை பொருத்தவரை அரசியல்

கட்சிகள் ஒன்றை ஒன்று தாக்கியும் அவைகளுக்குள் ஒரு சுமுகமான நிலைமை இல்லாத காரணத்தால் அரசாங்கத்தில் இருக்கின்றவர்கள் தவறான முறையில் இதை உபயோகித்துக் கொண்டு விடுவார்களோ என்ற பயம் இருக்கலாம். பொதுக்கூட்டங்களில் **indecent scurrilous** ஆக பேசினால் அதை கண்டு பிடிப்பது கடினம். செய்தித் தாள்களில் வருவதை நேரில் பார்க்கிறோம். ஆகவே தவறாக புரிந்துகொள்ள சந்தர்ப்பம் இல்லை. ஆனால் கூட்டத்தில் பேசுவதை எழுத்தின் மூலம் தவறாக எழுதிக்கொண்டுவந்து கொடுத்தால் உண்மையை தெரிந்துகொள்வது கஷ்டம். இது போன்ற அரசியல் காரியங்களுக்கு இதை பயன்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: சபாநாயகர் அவர்களே, இந்த சட்டம் பொதுவாக மக்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற முறையில்தான் இந்த சட்டம் வருகிறது. பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் இது எல்லாம் ஒரு அடிப்படையான உரிமையாக நம்முடைய அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தாலேயே இந்த உரிமைகளை நாம் கொண்டாடும்போது மற்றவர்களுடைய உரிமைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். நம்முடைய உரிமைகளை நாம் நிறைவேற்றுவதின் மூலம் மற்றவர்களுக்கு எவ்வித மான தீங்கோ, அல்லது வேறுவிதமான தொல்லையோ ஏற்படாமலும் அவைகளை தவிர்க்க வேண்டுமென்றும் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தால்தான் இதில் இன்னும் எத்தனையோ சேர்க்கலாம் என்று சங்கரன் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரி செய்தால் பேசவோ எழுதவோ இடமே இல்லாமல் போய்விடும். ஆகவே எந்த அளவுக்கு அவசியமோ அந்த அளவுக்கு கொண்டுவந்திருக்கிறோம். உரிமைகளை கட்டுப்படுத்துவதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இன்னொரு கோடிக்கு போய்விடக்கூடாது. ஆகையினால் யோசித்து இந்த அளவுக்கு செய்யவேண்டுமென்று இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மறுபடி **Select** கமிட்டியில் இதுபற்றி பரிசீலனை செய்யும்போது எங்களுக்கு தோன்றாதது, அவசியமானது ஏதாவது விட்டுப்போய் இருந்தால் அவைகளை சேர்க்கவேண்டுமே தவிர நமக்கு மனதில் தோன்றுவதை எல்லாம் சேர்த்துக்கொள்வது சரியல்ல. இதில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது ஆதிமூலம் அவர்கள் சொன்னது. நமக்குள் எதை எழுதுகிறோம், பேசுகிறோம் என்பதல்ல. வெளிநாடுகளில் இருந்து யாராவது வந்து தமிழனுடைய பண்பாடு என்ன என்பதை தெரிந்துகொள்ள இங்கே இருக்கின்ற பத்திரிகைகளை பார்த்தால் அல்லது பிறர் மூலமாக அவைகளில் இருக்கிறதை தெரிந்துகொண்டால் என்ன ஆவது. போஸ்டர்களை பார்க்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள். இன்று இருக்கின்ற நிலைமையில் தமிழ்நாட்டில் வரக்கூடிய பத்திரிகைகளைப் பார்த்தால் உண்மையிலேயே நாம் எல்லோரும் வெட்கப்படக்கூடிய ஒரு நிலைமைதான் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இந்த தமிழர்களுடைய பண்பாடு எவ்வகையிலும் சீரழிந்துபோகாமல் பாதுகாக்கக்கூடிய முறையில் நாம் எல்லோரும் நடவடிக்கை எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம். பத்திரிகை தொழிலில் இன்றைக்கு எந்த முறையை அனுசரித்தால் எந்த விதமான தலையங்கம் கொடுத்தால் அதிகமான பத்திரிகைகளை விற்கலாம் என்று இதை ஒரு கலையாக வைத்துக்கொண்டு இதில் ஆராய்ச்சி செய்வதுபோல் தோன்றுகிறது. இந்த முறையில் பல பத்திரிகைகள் தலைப்புகளை கொடுத்து அதன் காரணமாக அதிகமாக விற்கும்படியான நிலைமை வரும்போது எல்லோரும், குறிப்பாக இளைஞர்கள் இந்தப் பத்திரிகைகளை அதிகமாக வாங்குகிறார்கள். ஆகையினால் மற்றவர்கள் பார்த்து நம்முடைய தரம் இவ்வளவு தானா, தமிழ்நாட்டின் பண்பாடு இவ்வளவுதானா என்று அவர்கள் குறைவாக நினைக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதே மாதிரிதான் இன்றைக்கு எழுதுவதில் மட்டும் இல்லை, படங்கள் போடுவதில் மட்டும் இல்லை, பேசுவதிலும் தமிழர்களுடைய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு

பேசவேண்டும். அதற்காகத்தான் **Section 292-B** கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதை ஏன் அண்ணுமலை தங்களை தாக்குவதற்கென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைத்தார் என்று தெரியவில்லை. அவருடைய கட்சியாருடைய பேச்சை மனதில் வைத்துக்கொண்டு சொன்ஞரோ என்று சொல்ல நான் தயாராய் இல்லை. அவர் அப்படி நினைத்த தற்கு என்ன காரணம் ஏற்பட்டது என்று அவர் தன் மனதை ஆராய்ந்து பார்த்தால் ஒரு சமயம் உண்மை வெளிப்பட்டாலும் வெளிப்படலாம். '**By words, either spoken or intended to be read or by signs or by visible representations, makes any imputation which is grossly**'. இப்போது வேறு யாராவது பொதுவாக இங்கே இருக்கின்ற நிலைமை தெரியாது இருந்து அப்படிப்பட்டவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இந்த முறையில்தான் பேசு கிருர்கள்போல் தெரிகிறது. அதை வைத்துக்கொண்டுதான் சர்க்கார் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்களோ என்று எண்ணும்படியாகத் தான் அண்ணுமலை அவர்களின் பேச்சு இருக்கிறது. அந்த எண்ணத்தை மாற்றும் வகையில் **M. P.** சுப்ரமணியம் அவர்கள் பேசினுர்கள். ஆனல் அதை மாற்றுவது கஷ்டம். சட்ட சபைகளில் பேசும்போதுகூட நாம் கொஞ்சம் யோசித்து பேசவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நாம் தமிழன் என்ற முறையில் நாம் சரிவர பேசவேண்டும் என்பது என் கருத்து. இதுமாதிரி அரசியல் கட்சிகள் பேசினுலும் கூட இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். "நாங்கள் திராவிட முன்னேற்றக் கட்சியை சேர்ந்தவர்கள. நீங்கள் காங்கிரஸ்காரர்கள். அதன் காரணமாக எங்களை ஒழிக்கவேண்டும் என்றே இந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறீர்கள்," என்று நாளைக்குச் சொல்வார்களே என்பதற்காக இதில் நடவடிக்கை எடுக்காமல் இருக்கப் போவதில்லை. அதேமாதிரி யார் பேசினுலும் அப்படித்தான். கனம் அண்ணுமலை அவர்கள் இந்தச் சட்டம் அவர்கள் கட்சிக்கு ஆட்டம்பாம் போல வந்திருக்கிறது என்று சொல்வதில் இருந்து அவர்கள்தான் அப்படிப் பேசுகிருர்களே, அவர்களுக்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படு கிறதோ என்று கூட இங்கே அவர் பேச்சைக் கேட்டவர்கள் பலர் எண்ணக் கூடும். இப்படி எதையும் யோசிக்காமல் அவர் பேசக்கூடாது.

Sri M. P. SUBRAMANIAM: சட்டமன்றத் தலைவர் அவர் களே, ஸ்ரீ அண்ணுமலை அவர்கள் பேசிய பேச்சை வைத்துக்கொண்டு தவருன முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் பேசுகிறது என்று கருத்துப்பட அமைச்சர் அவர்கள் பேசுவது டீசென்சி ஆகாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: டீசென்சி இல்லாமல் பேசிவிட்டார்கள் என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. உண்மையில் திராவிட முன்னேற்றக் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் அவர் அப்படிப் பேசியிருக்கக்கூடாது என்றுதான் நான் விளக்க விரும்பு கிறேன். என் பேச்சு இன்டீசன்ட் என்ருல் (ஸ்ரீ எம். பி. சுப்பிரமண்யம்: நான் இன்டீசன்ட் என்று சொல்லவில்லை). இன்டீசன்ட் என்று சொல்லா விட்டாலும், டீசென்சி இல்லை என்ருல், நான் சொல்வது இந்தச் சபைக்கு விரோதமாக—இன்டீசன்ட் ஆக இருந்தால் சபைத் தலைவர் அவர்கள் நட வடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தச் சட்டம் எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்தத் தனிப்பட்ட மனிதராக இருந்தாலும்—கண்டபடி பேசுவதைத் தடுக்கக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தக் குல்லாவை ஸ்ரீ அண்ணுமலை அவர்கள் தூக்கிப் போட்டுக்கொள்ள வேண்டாம் என்பது எனது தாழ்மையான கருத்து. அதுவும் திராவிட முன்னேற்றக் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் போட்டுக் கொள்ள வேண்டாம், தனிப்பட்ட முறையில் போட்டுக்கொண்டாலும் பரவாயில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்து நல்லதொரு சட்டமாகக் கொண்டுவரவேண் டும். சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான்

TRUTH ALONE TRIUMPHS

நான் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புகிற தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. கனம் அங்கத்தினர்கள் யோசனைபடி இப்போது பொறுக்கு கமிட்டிக்கு அனுப்புகிற தீர்மானத்தை ஒப்புக்கொள்கிறேன். எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 7 of 1960), and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. T. Daniel.
Sri T. Sampath.
Sri V. S. Manickasundaram.
Sri P. Ramachandran.
Srimathi T. N. Anandanayaki.
Sri A. P. C. Veerabahu.
Sri V. Vedayyan.
Sri M. P. Subramaniam.
Sri P. S. Chinnadurai.
Sri S. Sowdi Sundara Bharathi.
Sri D. S. Authimoolam.
Sri M. Kalyanasundaram.

The motion was put and carried.

MR. SPEAKER : There are two more Bills. I do not know if the House likes to sit till these two Bills are disposed of.

THE HON. SRI C. SUBRAMANIAM : We can dispose of these two Bills. There may not be much discussion on them.

(5) THE MADRAS ANATOMY (AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 10 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

That the Madras Anatomy (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 10 of 1960) be taken into consideration.

This is a non-controversial Bill, and the various provisions are well known. I move that the Bill be taken into consideration.

MR. SPEAKER: The question is—

That the Madras Anatomy (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 10 of 1960) be taken into consideration.